[1979 ஏப்ரல் 11

புதுப்பாளையம் ஒன்றிய ஆசிரியர்களது ஊதியம்.

வினா எண் 686—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1962-ல் இருந்து ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை ஆசிரியர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது?

(இ) என்ன காரணத்தினால்?

(ஈ) அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ), (இ), (ஈ) இவ்வினாக்களுக்கு இடமில்லை.

பழநி தாலூகாவில் உள்ள கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல்.

*வினா எண். 687—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழநி தாலூகாவில் உள்ள எரமநாயக்கன்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி, வத்தகவுண்டர்வலசு, சங்கஞ்செட்டிவலசு மற்றும் பல்வேறு கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அவ்வூர் மக்களுக்கு குடிநீர் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) ஆம்.

(ஆ) ஒன்றியத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.